செ.வெ.எண்.438 நாள்.04.09.2017

**காஞ்சிபுரம் மாவட்டம் , ஸ்ரீபெரும்புதூர் வட்டம், சிறுமாத்தூர் கிராம மக்கள் 81 நபர்களுக்கு ரூ.3,29,56,875 மதிப்பிலான வீட்டுமனைப் பட்டாக்களை மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

*************

காஞ்சிபுரத்தில் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் இன்று (04.09.2017) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களாக முதியோர் ஓய்வூதியம், பசுமை வீடு, பட்டா மாற்றம், வாரிசு சான்றிதழ், சாதி சான்றிதழ், பேருந்து வசதி, வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, விலையில்லா தையல் இயந்திரம், சலவை பெட்டி, குடிநீர் வசதி, மின்வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான நிதியுதவி போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி உடனடியாக தீர்வு காண உத்தரவிட்டார்.

முன்னதாக, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், சிறுமத்தூர் கிராம மக்களின் நீண்ட நாட்களாக வீட்டுமனைப்பட்டாக்கள் கேட்டு கோரிக்கை விடுத்தனர். பொதுமக்களின் கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலித்த மாவட்ட ஆட்சித்தலைவர் அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு தகுதியுடைய அனைவருக்கும் வீட்டுமனைப்பட்டாக்களை வழங்க உத்தரவிட்டார். அதனடிப்படையில் இன்று பொதுமக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் 81 நபர்களுக்கு ரூ.3,29,56,875 மதிப்பிலான வீட்டுமனைப்பட்டாக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலகில் பதவியிருக்கும் போது உயிரிழந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் அலுவலக உதவியாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். மேலும், 2015–2017ஆம் நிதியாண்டில் மாவட்ட அளவில் சிறுசேமிப்பு வசூலுக்காக சிறப்பாக பணியாற்றிய 24 முகவர்களுக்கு பரிசாக ரூ.27,000/– மதிப்பிலான தேசிய சேமிப்பு பத்திரம் மற்றும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ.நூர்முகமது, காஞ்சிபுரம் கோட்டாட்சியர் (பொ) திரு.ஆர்.பன்னீர்செல்வம், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி. அங்கூர் லாதர், ஸ்ரீபெரும்புதூர் வட்டாட்சியர் திரு.ஏழுமலை மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்திவெளியீடு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,காஞ்சிபுரம்.